வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி : 03.03.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா தனது வலுவான பொருளாதாரத்தால், உலகின் நம்பிக்கைமிக்க கலங்கரை விளக்கமாக திகழ்கிறது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஆதரித்து கருத்து தெரிவிப்பதாக, சமூக ஊடகங்களில் பரவும் போலி வீடியோவை, மத்திய அரசு மறுத்துள்ளது.

புதுச்சேரி வைத்திகுப்பம் கடற்கரையில், இன்று நடைபெற்ற 124ஆம் ஆண்டு மாசிமக தீர்த்தவாரியில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கலந்து கொண்டு, சாமி தரிசனம் செய்தார்.

திருநள்ளாறு ஸ்ரீதர்பாரண்யேஷ்வர சுவாமி கோவிலில், வரும் 6ஆம் தேதி, சனிப்பெயர்ச்சி விழா நடைபெற உள்ளதை ஒட்டி சிறப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக, மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி தெரிவித்துள்ளார்.

-----------------------------

மோடி 1 (19)

இந்தியா தனது வலுவான பொருளாதாரத்தால், உலகின் நம்பிக்கைமிக்க கலங்கரை விளக்கமாக திகழ்கிறது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். பட்ஜெட்டுக்கு பிந்தைய கருத்தரங்காக

பொருளாதார வளர்ச்சியை நிலை நிறுத்துதல், மற்றும், வலுப்படுத்துதல் என்ற தலைப்பில், இணைய வழியில் நடைபெற்ற பட்ஜெட்டுக்கு பிந்தைய கருத்தரங்கில், உரையாற்றிய அவர், இன்று உலகம் நம்பகமான மற்றும் உறுதியான உற்பத்தி நாடுகளை தேடுவதாகவும், அந்த திசையில் இந்தியா ஒரு நம்பிக்கை நிறைந்த நாடாக திகழ்கிறது என்று கூறினார். கட்டமைத்தல், அதிக உற்பத்தி, அதிக ஒருங்கிணைப்பு, அதிக ஏற்றுமதி அரசின் முக்கிய நோக்கம் என்றும், பிரதமர் உறுதிப்பட தெரிவித்தார். இந்தியா பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருப்பதை சுட்டிக் காட்டிய அவர், இதன்மூலம், இந்தியாவிற்கும், பரந்த வாய்ப்புகளுக்கான கதவுகள் திறக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார். பொருட்கள் மற்றும் சேவையின் தரத்தில் சமரசம் செய்யாமல் இருப்பதே அனைவரின் பொறுப்பு என்றும், தயாரிப்புகள் உலக தரத்தில் இருப்பது முக்கியமானது என்றும் கூறினார். ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் முதலீட்டை அதிகரிப்பதோடு, தரத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று, தொழில் துறையினரை பிரதமர் கேட்டுக் கொண்டார். அடிப்படை மாற்றங்களை கொண்டு வர, தொழில்

மோடி 2 (8)

துறை, நிதி நிறுவனங்கள், மற்றும், மாநில அரசுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தினார். உயிரியல் மற்றும் அடுத்தத் தலைமுறை சிகிச்சை மேம்பாட்டிற்கான, உலகளாவிய மையமாக இந்தியாவை கட்டமைக்கும் நோக்கத்தில், பயோ ஃபார்மா சக்தி திட்டத்திற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது குறித்தும் பிரதமர் சுட்டிக் காட்டினார். மேம்பட்ட பயோ ஃபார்மா ஆராய்ச்சி, மற்றும், உற்பத்தியில், நமது நாட்டை முன்னணியில் நிறுத்துவதற்கு இந்த திட்டம் ஒரு முன்முயற்சி என்றும் பிரதமர் தெரிவித்தார்.

-----------------------------

*வன விலங்கு தினம் 1 (4)*

உலக வன விலங்குகள் தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது. இத்தினத்தை ஒட்டி, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் சமூக ஊடகத்தில் செய்தி வெளியிட்டுள்ளனர். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு…..

(வாய்ஸ்)

*வனவிலங்கு தினம்* 2 (17)

(வாய்ஸ்)

உலக வனவிலங்குகள் தினத்தை ஒட்டி, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், இந்த நாள், நமது பூமிப் பந்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் சிறப்புமிக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் பன்முகத் தன்மையை கொண்டாடுவதை நினைவுப் படுத்தவதாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். உலகின் மிகப் பெரிய புலிகள், மற்றும், ஒற்றை கொம்பு காண்டாமிருகங்கள், கணிசமான எண்ணிக்கையிலான ஆசிய யானைகள், மற்றும், கம்பீரமான ஆசிய சிங்கங்களின் ஒரே இயற்கை வாழிடமாக இந்தியா திகழ்கிறது என்று, குடியரசுத் துணைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில், வன விலங்குகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக தெரிவித்துள்ளார். வனவிலங்குகளின் பாதுகாப்பு, நிலையான சுற்றுச் சூழலுக்கு முக்கியத்துவமான என்று அவர் கூறியுள்ளார். உலகிலேயே மிக அரிய வகை வனவிலங்குகள் இந்தியாவில் இருப்பதாக சுட்டிக் காட்டியுள்ள பிரதமர், வனவிலங்குகளின் பாதுகாப்பிற்கு போராடுபவர்களை கவுரவிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் தெரிவித்துள்ளார். உலகில் உள்ள புலிகளின் எண்ணிக்கையில் 70

*வனவிலங்கு தினம் 3 (8)*

சதவிகிதம் இந்தியாவில இருப்பதாகவும், பிரதமர் குறிப்பிட்டுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு, புலிகள் முதல், சிறிய வகை வனவிலங்குகள் வரை, அனைத்து விலங்குகளின் பாதுகாப்பும் முக்கியமானது என்று தெரிவித்துள்ளார். மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள செய்தியில், உலக வனவிலங்குகள் தினம் என்பது, பல்லுயிர் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

-----------------------------

*ராஜ்நாத் சிங்* (12)

ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஆதரித்து கருத்து தெரிவிப்பதாக, சமூக ஊடகங்களில் பரவும் போலி வீடியோவை, மத்திய அரசு மறுத்துள்ளது. இது டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் மாற்றி அமைக்கப்பட்ட போலியான வீடியோ என்று, பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை சரிபார்க்கும் பிரிவு தெரிவித்துள்ளது. பாதுகாப்புத் துறை அமைச்சர் அத்தகைய அறிக்கை வெளியிடவில்லை என்றும், இதுபோன்ற போலியான வீடியோக்கள் குறித்து, மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் மத்திய அரசு வலியுறுத்தி உள்ளது. இதுபோன்ற போலி வீடியோக்கள் குறித்து Factcheck@pib.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 8799711259 என்ற எண்ணில் தொடர்பு கொண்டோ புகார் அளிக்கலாம் என்று, இந்திய அரசின் பத்திரிக்கை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

-----------------------------

*பிரதமர் யூ- ட்யூப்* (4)

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் யூ-ட்யூப் சமூக வலைதள சந்தாதாரர்களின் எண்ணிக்கை 3 கோடியை தாண்டி, புதிய மைல்கல்லை எட்டி உள்ளது. 2007ஆம் ஆண்டு இவ்வலைதளத்தில் இணைந்த பிரதமர், தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

------------------------------

*மாசிமகம் புதுச்சேரி (11)*

புதுச்சேரி வைத்திகுப்பம் கடற்கரையில், இன்று நடைபெற்ற 124ஆம் ஆண்டு மாசிமக தீர்த்தவாரியில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கலந்து கொண்டு, சாமி தரிசனம் செய்தார். அவருடன் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன். சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமலிங்கம் ஆகியோரும், சாமி தரிசனம் செய்தனர். மாசிமக தீர்த்தவாரியை ஒட்டி, வைத்திக்குப்பம் கடற்கரையில், மயிலம் முருகர், தீவனூர் விநாயகர், செஞ்சி ரங்கநாதர், மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி, மற்றும், புதுச்சேரி மணக்குள் விநாயகர், வரதராஜபெருமாள், வேதபுரீஸ்வரர், முத்தியால்பேட்டை லட்சுமி ஹயக்ரீவர் என, புதுச்சேரி மற்றும் தமிழக பகுதிகளில் இருந்து, 100க்கும் மேற்பட்ட சுவாமி உற்சவர்கள் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

------------------------------

*சனிப்பெயர்ச்சி விழா* 1 (5)

காரைக்கால் திருநள்ளாறு ஸ்ரீதர்பாரண்யேஷ்வர சுவாமி தேவஸ்தானத்தில், வரும் 6ஆம் தேதி, வெள்ளிக்கிழமை காலை 8.24 மணிக்கு, சனிபகவான் கும்ப ராசியில் இருந்து, மீன ராசிக்கு இடம்பெயரும் சனிப்பெயர்ச்சி விழா நடைபெற உள்ளதாக, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி தெரிவித்துள்ளார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*சனிப்பெயர்ச்சி விழா* 2 (13)

(வாய்ஸ்)

இதுகுறித்து இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விழாவிற்கு 3 முதல், 4 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுவதால், விரிவான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக கூறினார். இலவச தரிசன

வரிசை, மற்றும், 300 ரூபாய் முதல், 1000 ரூபாய் வரையிலான கட்டண வரிசைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பக்தர்களின் வசதிக்காக, தரிசன வரிசைகள் முழுவதும் கூரைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும், குடிநீர், அன்னதானம், கழிவறை, மற்றும், தாயமார்களுக்கான பிரத்யேக அறைகள் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாகவும், மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி தெரிவித்தார். நலன் குளம் சீரமைக்கப்பட்டு, புதிய நீர் நிரப்பப் பட்டுள்ளதுடன், பெண்கள் உடை மாற்ற கூடுதல் வசதிகள் செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பக்தர்களின் வசதிக்காக, பேருந்து சேவை, மற்றும், வாகன நிறுத்த இடங்கள் போதுமான அளவு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக கூறினார்.

*சனிப்பெயர்ச்சி விழா 3 (7)*

பாதுகாப்பிற்காக 200க்கும் மேற்பட்ட சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, 24 மணி நேரமும் கண்காணிக்கப் படுவதாக தெரிவித்தார். மேலும் பக்தர்களின் அவசரகால உதவிக்கு 83002 61071 மற்றும் 1077 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம் என்றும் திருமதி இஷிதா ராட்டி தெரிவித்தார். சனிப்பெயர்ச்சி விழா நடைபெறும் 6ஆம் தேதியன்று, காரைக்காலில், பள்ளிகளுக்கு விடுமுறை அளிப்பது குறித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

-----------------------------

*விமான சேவை 1 (17)*

வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களை பாதுகாப்பாக மீட்டு வருவதற்காக சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் இருந்து, சிறப்பு விமானங்கள் இயக்கப்பட உள்ளதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக, இண்டிகோ விமான நிறுவனம், ஜெட்டாவில் உள்ள இந்திய துணை தூதரகத்துடன் இணைந்து செயல்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக, மத்திய சிவில் விமான

போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, அத்துறை செயலர் திரு. சமீர் குமார் சின்ஹா உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். மேலும், வெளிநாட்டு விமான நிறுவனங்களுடனும் இதுதொடர்பாக, இந்திய விமான நிறுவனங்கள் ஆலோசனை மேற்கொண்டு, ஒருங்கிணைந்து செயல்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, துபாயில் இருந்து, ஏர் இந்தியாவின் முதல் விமானம் இன்று புதுடெல்லி விமான நிலையத்தை வந்தடைந்து. இதுகுறித்து ஏர் இந்தியா நிறுவனம் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், 149 பயணிகள் மற்றும் 8 விமான ஊழியர்களும், பாதுகாப்பாக புதுடெல்லி வந்தடைந்ததாக தெரிவித்துள்ளது.

*விமான சேவை 2 (5)*

இதற்காக, மத்திய சிவில் விமான போக்குவரத்து இயக்குனரகத்திற்கும் ஒத்துழைப்பு அளித்த துபாய் அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக, ஏர் இந்தியா குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில், சென்னையில் இருந்து, மத்திய கிழக்கு நாடுகளுக்கு இயக்கப்படும் விமான சேவைகள் இன்று 4ஆவது நாளாகவும் ரத்து செய்யப் பட்டுள்ளன.

-----------------------------

*சந்திர கிரகணம்* (6)

நாட்டின் பல்வேறு பகுதிகளில், இந்த ஆண்டின் முதல் சந்திர கிரகணம் தற்போது நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது. பிற்பகல் 3.20 மணிக்கு தொடங்கிய சந்திர கிரகணம், மாலை 6.47 மணி வரை நீடிக்கும் என்று, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளில், சந்திர கிரகணம் விலகும் பொழுது, சந்திரன் சிவப்பு நிறத்தில் சிறு பிறை போல தெரியும் என்று, அறிவியல் ஆர்வலர்கள் கூறியுள்ளார்.

-----------------------------

*வானிலை (9)*

மன்னார் வளைகுடா மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி, மற்றும், இந்தியப் பெருங்கடல் பகுதிகளின் மேல்நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, வரும் 6ஆம் தேதி வரை, தமிழகம், புதுச்சேரி, மற்றும், காரைக்கால் பகுதிகளில், பொதுவாக வறண்ட வானிலையே நிலவக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நாளை, அதிகபட்ச வெப்பநிலை இயல்பு நிலையிலேயே இருக்கும் என்றும், அதற்கடுத்த 3 நாட்களுக்கு, இயல்பில் இருந்து, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*நேபா□ தேர்தல் (8)*

நேபாள நாடாளுமன்றத் தேர்தல் நாளை மறுநாள் நடைபெற உள்ளது. 275 உறுப்பினர்களை கொண்ட அந்நாட்டு நாடாளுமன்றத்திற்கு, 165 உறுப்பினர்கள் நாளை மறுநாள் நடைபெறும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். மீதமுள்ள 110 பேர், சிறப்பு முறையில் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். நேபாளத்தில் 18 கோடியே 9 லட்சத்து 3 ஆயிரத்து 689 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இந்த தேர்தலில் 68 அரசியல் கட்சிகளும், சுயேட்சைகள் உட்பட 3 ஆயிரத்து 484 வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியா தனது வலுவான பொருளாதாரத்தால், உலகின் நம்பிக்கைமிக்க கலங்கரை விளக்கமாக திகழ்கிறது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஆதரித்து கருத்து தெரிவிப்பதாக, சமூக ஊடகங்களில் பரவும் போலி வீடியோவை, மத்திய அரசு மறுத்துள்ளது.

புதுச்சேரி வைத்திகுப்பம் கடற்கரையில், இன்று நடைபெற்ற 124ஆம் ஆண்டு மாசிமக தீர்த்தவாரியில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கலந்து கொண்டு, சாமி தரிசனம் செய்தார்.

திருநள்ளாறு ஸ்ரீதர்பாரண்யேஷ்வர சுவாமி கோவிலில், வரும் 6ஆம் தேதி, சனிப்பெயர்ச்சி விழா நடைபெற உள்ளதை ஒட்டி சிறப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக, மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.